**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கூட்டுறவுத் துறை – கருணை அடிப்படையிலான பணிநியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ஜே.முகமதுஅப்துல்ரகுமான், முதுநிலை ஆய்வாளரின் மகன் திரு.மு.அப்துல்ஜப்பார், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை**

அரசாணை 3(ப) எண். 1 நாள்: 09.01.2020

விகாரி வருடம்
மார்கழி திங்கள் 24–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) கடிதம் ந.க.எண்.26561/2018/பதொ4, நாள் 01.08.2019.

-----

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்களின் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணியிலிருக்கும் போது 10.02.2012 அன்று பணியிடை மரணமடைந்த திரு.ஜே.முகமதுஅப்துல்ரகுமான், முதுநிலை ஆய்வாளர் என்பவரின் மகன் திரு.மு.அப்துல்ஜப்பார் என்பவர் அரசாணை (2டி) எண்.7 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஎல்2) துறை, நாள் 04.02.2019–ல் குறும வயது மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(பி)–யினை அத்தனியர் பொருட்டு தளர்த்தி, உரிய கல்வித் தகுதி பெற்றிருந்ததன் காரணமாக கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, துணைப்பதிவாளர் (பொவிதி), பெரம்பலூர் அலுவலகத்தில் 08.03.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்று கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா)

2. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் திரு.மு.அப்துல்ஜப்பார், இளநிலை உதவியாளரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து தக்க ஆணை வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே பத்தி 2–ல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திரு.மு.அப்துல்ஜப்பார் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கூட்டுறவுத் துறையில், துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்), பெரம்பலூர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 08.03.2019 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட விவரத்தைப் பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அலுவல் சார்பற்ற எண் 16741/கியூ2/2019–1, நாள் 27.09.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (ஜி)த் துறை அலுவல் சார்பற்ற எண் 33053/ஜி2/2019–1, நாள் 09.10.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தயானந்த் கட்டாரியா**
**கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
திரு.மு.அப்துல்ஜப்பார், இளநிலை உதவியாளர்,
(வழி: கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10).
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலகம், பெரம்பலூர்.
மண்டல இணைப்பதிவாளர், பெரம்பலூர்.

<u>நகல்:</u>
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை , சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

அரசு சார்புச் செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை–600 009.